விஜயபாரதம்

04.09.2020 மலர் - 1, இதழ் - 152 VIJAYABHARATHAM DAILY

மின்னனு தின இதழ் (தனிச்சுற்று)

# வணக்கம்

## யாரை ஏமாற்ற இந்த வேலை?

சமீப காலமாக ஸ்டாலினின் மனைவி துர்கா கோயில்களுக்கு செல்வது, திருப்பணிகள் செய்வது என பல செய்திகள் வருகின்றன. சற்று கூர்ந்து கவனித்தால் ஸ்டாலின் ஹிந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் போதும், தேர்தலின் போதும் துர்கா ஸ்டாலின் குறித்த இந்த செய்திகள் அவர்களால் திட்டமிட்டே வெளியிடப்பட்டு வருவது புலனாகும்.

சமீபத்தில் திருமாவளவனின் சகோதரியின் அடக்கம், கிருஸ்துவ முறைப்படி நடந்த புகைப்படம் வெளியானது. அதை மறைக்கவும், ஹிந்துக்களின் ஓட்டை குறிவைத்தும் 16ஆம் நாள் காரியத்தின் புகைப்படங்கள் திட்டமிட்டே அவர்களால் வெளியிடப்பட்டது. இதை போல பாண்டியன், காந்தி, ராஜா, மனுஷ்ய புத்திரன் என ஹிந்துக்கள் சார்ந்த பெயரை வைத்துக்கொண்டு ஹிந்துக்களுக்கு எதிராக செயல்பட்டுவரும் ஒரு பெரிய கும்பலே தமிழகத்தில் உண்டு.

திட்டமிட்டு இவர்கள் செய்யும் மூளை சலவையை அப்பாவி பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க உதவும் குடும்ப தொலைகாட்சிகள், சார்பு ஊடகங்கள், வலைத்தள குழுக்கள் வேலை செய்கின்றன. அன்னிய சக்திகளுக்கும் இதில் பங்கு உண்டு. 'கோபேக் மோடி' பிரசாதத்தில் பெரும்பகுதி பாகிஸ்தான், துருக்கி போன்ற நாடுகளில் இருந்து செய்யப்பட்டது என்பதே இதற்கு சாட்சி. இவர்களுக்கு கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல அ.தி.மு.க'வினர். இதற்கு ஹிந்து பண்டிகைகளுக்கு தடை, மற்ற மத விழாக்களுக்கு சலுகை போன்ற எண்ணற்ற உதாரணங்கள் உண்டு. இவர்களுக்கு உண்மையில் ஹிந்துக்கள் மீது அக்கறை இல்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் ஹிந்துக்களின் ஓட்டுகள் மட்டுமே. இவர்கள் திட்டமிட்டு செய்யும் பித்தலாட்டங்களில், இனியும் ஏமாற மாட்டோம் என்பதை ஹிந்துக்கள் வரும் தேர்தலில் புரியவைக்க வேண்டும்.

கழகங்கள் இல்லா தமிழகம் ஒன்றே இதற்கு நிரந்தர தீர்வு.

# கர்மயோகி . . .

அரசு நிர்வாகத்தை சீரமைக்க, கர்மயோகி எனப்படும் அரசு ஊழியர்களுக்கான, தேசிய திறன் கட்டமைத்தல் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதில் அரசு ஊழியர்கள் சர்வதேச சிறந்த செயல்முறைகளை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு பெறுவர், என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதன் மூலம் அதிகாரி தனக்கு ஆர்வமுள்ள துறையைத் தேர்வு செய்ய முடியும். அதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். அதிகாரிகள் வேலைகளை திறம்படச் செய்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# புதிய உத்தி



தனியார் நிறுவனங்களில் இளைஞர் களுக்கான வேலைவாய்ப்புகளை பெற தமிழக அரசு http://tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தை சமீபத்தில் துவங்கியுள்ளது. இதில் வேலை தேடுவோரும், வேலைக்கு ஆட்கள் தேடும் தனியார் நிறுவனங்களும் பதிவு செய்து பலன் பெறலாம். தமிழக அரசின் இந்த புதிய முயற்சியை பாராட்டலாமே.



# தொடரும் சாதுக்களுக்கு மிரட்டல்



ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள மௌனி பாபா ஆசிரமத்தில், நக்ஸல் தொடர்புள்ள ரவிதாஸ் என்பவன் ரௌடிகளுடன் நுழைந்து அங்குள்ளவர்களை மிரட்டியுள்ளான். பால்கரில் நடந்தது போல் உங்களுக்கும் நேரும் என்று அச்சுறுத்தியுள்ளான். முன்னதாக கடந்த ஏப்ரலில் மகாராஷ்டிரா, பால்கரில் கல்பவிருக்ஷ கிரி மஹராஜ், சுஷில் கிரி மஹராஜ் ஆகிய இரு சாதுக்களை ஒரு பயங்கரவாத கும்பல் காவல்துறையினர் கண் முன்னரே அடித்துக் கொன்றது நினைவிருக்கலாம். தற்போது அதே போல சாதுக்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# புதுமை இந்தியா . . .




உலகளவிலான புதுமை தரவரிசை பட்டியலை(GII) உலக அறிவுசார் சொத்து நிறுவனம் (WIPO) வெளியிட்டுள்ளது. இதில் கடுமையான கொரோனா தொற்று காலத்திலும் இந்தியா கடந்த ஆண்டை விட நான்கு இடம் முன்னேறி 48வது இடத்தை பிடித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தியாவின் முன்னேற்றம் இதில் முக்கியமானது. 2015 இல் இந்தியா 81வது இடத்திலிருந்தது. தற்போது 48வது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

# சிந்தனை செய் மனமே!

எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று
நீயும் பின்தொடராதே!
உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு . . .

# சிறையில் மலர்ந்த கீதை



சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை என்று முதன் முதலில் கர்ஜனை செய்தவர் பால கங்காதர திலகர்.

அவர் ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு பர்மாவிலுள்ள மாண்டலே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்தக் காலத்தில் மாண்டலே சிறையிலும் அந்தமான் சிறையிலும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் சொல்ல முடியாத கொடுமைகளை அனுபவித்தனர்.

அந்த நிலையிலும் கூட திலகர் சிறையில் இருந்தவாறே பகவத்கீதைக்கு விளக்கவுரை எழுதினார். அதற்கு கீதா ரகசியம் என்று பெயரிட்டார். ''மாண்டலே சிறைச்சாலையில் எழுதப்பட்ட கீதா ரகசியத்தின் கையெழுத்துப் பிரதி ஒருவேளை ஆங்கிலேய அரசினால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தால்....' என்று ஒரு பத்திரிகையாளர் திலகரிடம் கேட்டார். அதற்கு திலகர், “அரசினால் என்னுடைய அறிவைப் பறிமுதல் செய்யமுடியாது. என்னால் மீண்டும் இந்த நூலை எழுதமுடியும்'' என்றார்.

அப்போது அவருக்கு வயது 60. அந்த வயதிலும் கூட அவருக்கு தீவிரமான தன்னம்பிக்கை இருந்தது.



அரசு வழிகாட்டுதல்கள் அப்பட்ட மீறல்
பேருந்தில் சமூக இடைவெளி
இல்லாமல் பயணிக்கும் பயணியர்.